**தலைமை நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பெரம்பலூர்**

**MCOP.No.72/2024**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ம் நாள் வியாழக்கிழமை எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எ.ம.த.சா. 1– இலக்கியா, த/பெ– இளங்கோவன். என்பவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) பெஞ்ச் கிளார்க் கிரேடு–2 திருமதி.க. சவிதா, என்பவரினால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **எ.ம.த.சா.1 இலக்கியா** | **தொழில்** | **தட்டச்சர், வட்டாரப்போக்குவரத்து அலுவலகம், பெரம்பலூர்** |
| **த/பெ.** | **இளங்கோவன்** | **வட்டம்** | **பெரம்பலூர்** |
| **கிராமம்** | **பெரம்பலூர்** | **வயது** | **27/2026** |

**முதல் விசாரணை**

நான் 2 ஆம் எதிர்மனுதாரப்பில் 1– வது சாட்சி ஆவேன். நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகின்றேன் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வட்டாரப்போக்குவரதது அலுவலர் எனக்கு அனுமதி அளித்து கொடுத்த கடிதம் **எ.ம.சா.ஆ.1** ஆகும். மனுதாரர் ஓட்டிச்சென்ற T N 46 W 3075 என்ற மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ.2** ஆகும். விபத்து சமயத்தில்

மனுதாரரது ஓட்டுநர் உரிமம் நடப்பில் இல்லையென்பதற்காக வழங்கப்பட்ட சோதனை அறிக்கை **எ.ம.சா.ஆ.3** ஆகும். 1–ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 46 AB 0648 என்ற மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ.4** ஆகும். 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்பதற்காக வழங்கப்பட்ட சோதனை அறிக்கை **எ.ம.சா.ஆ.5** ஆகும். 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு விதிக்கப்பட்ட அபராதம் ரூ.5,500/– செலுத்தியதற்கான அபராத ரசீது **எ.ம.சா.ஆ.6** ஆகும். குன்னம் வட்டம், வீரமநல்லூர் கிராமம் எங்கள் அலுவலக அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். வீரமநல்லூர் கிராமத்தை சேர்ந்த விக்னேஷ் த/பெ. ஏகமூர்த்தி என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அலுவலகத்தில் தேடிப்பார்த்தோம் இல்லை.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–**

வாகனத்தை நான் தணிக்கை செய்யவில்லையென்றால் சரிதான். விக்னேஷ் வேறு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கணினி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**<u>மறு விசாரணை :–இல்லை</u>**

**ஒப்பம்/– க. மோகனப்பிரியா,**
**சார்பு நீதிபதி,**
**தலைமை நீதித்துறை நடுவர்(FAC),**
**பெரம்பலூர்.**